إنَّ الدِّينَ عِندَ اللَّهِ الإِسْلَام　　　لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ مُحَمَّدٌ رَسُولُ اللَّهِ

# Friday Sermon

## HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH

## Munir Ahmad Azim

*19 October 2018*
*(9 Safar 1440 AH)*

### “PERFECTING GOOD MANNERS”

### “நன்னடத்தை முறைகளை, முழுமையடைய செய்யுங்கள்!”

**(Tamil version - தமிழ் பதிப்பு)**



சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுதும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

நன்னடத்தை முறைகளை, முழுமையடைய செய்யுங்கள்! என்ற தலைப்பை அடிப்படையாக்கி கொண்டு இன்றைய வெள்ளிக்கிழமை பேருரையில் நான் உங்களிடம் பேச எண்ணுகிறேன். தங்களது அன்றாட

வாழ்கையில் ஒழுங்கான முறையில் நடந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்பதை ஒவ்வொரு நல்ல முஸ்லீம்களும் புரிந்திருக்க வேண்டும். இவ்வுலகில் கண்ணியமிக்க ஒரு வாழ்க்கையை அமைத்திட நன்னடத்தை முறைகளைப் பற்றிய விழிப்புணர்வை பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். ஒரு முஸ்லீம் இதை தனது புனிதமான கடமையாக உணர்ந்துக் கொள்வதுடன் இதில்தான் தனது நல்லொழுக்க மதிப்புகள் நிலை நிற்கிறது என்பதையும் அறிந்திருக்க வேண்டும். குறிப்பாக இந்த ஒழுக்க நெறிகளுக்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. இவ்வுலக வாழ்க்கையில் மகிழ்ச்சி மற்றும் வெற்றியினை பெற இது மிகவும் அவசியமாகும். ஆனால் மறுமையில் இதைவிட மேலானவற்றை பெறலாம் என்பதையும் புரிந்திருக்க வேண்டும். நமது அன்புக்குரிய தூதர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுயிருப்பதை காணலாம்.

**“முற்றிலும் சிறந்த நல்லொழுக்க பண்புகளுடன் நான் அனுப்பபட்டுள்ளேன்”** (முஸ்னத் அஹ்மது)

அன்னார் மேலும் கூறுகிறார்.

**“உயர்த்தெழுதல் நாளின் போது, என்னுடைய நெருங்கிய நண்பர்களாகவும், எனக்கு மிக நெருங்கியவர்களாகவும் இருப்பவர்கள் யார் என்றால், ஒழுக்க நெறியினை கடைபிடித்து வாழ்ந்தவர்கள் ஆவார்கள்.”** (திர்மிதி)

**“சொர்கத்தில் மக்கள் நுழைவதற்கு முற்றிலும் சிறந்த காரணம் என்ன?”** என்று அவரது தோழர்கள் கேட்ட போது திரு நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார். **“தக்வா” – taqqa** (பக்தி, நேர்மை, இறையச்சம், நன்னடத்தை) (திர்மிதி, இப்னுமாஜ)

எனவே, முஸ்லீம்கள் தார்மீக காரியங்களுக்கு சிறந்த வகையில் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். இம்மையிலும் மறுமையிலும் வெற்றியினை அடைவதற்கு இத்தகைய நன்னடத்தை முறைகள் மிக அவசியமாகும். உயரிய இஸ்லாமிய நல்லொழுக்க மதிப்பீடுகள் நான்கு தூண்களாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதனை நான்கு ஹதீஸுகளில்

விவரிக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் இஸ்லாமிய நல்லொழுக்க மதிப்பீடுகளின் ஒவ்வொரு தூண்களாக திகழ்கிறது.

அபூகுறைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். திரு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், **"அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்பவர் நல்ல வார்த்தைகளைக் கூறிக்கொள்ளட்டும் அல்லது அவர் மௌனமாகயிருக்கட்டும். அதுவே அவருக்கு சிறந்தது. அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும், நம்பிக்கைக் கொள்பவர் தனது அண்டை வீட்டாரிடத்தில் இரக்கத்துடன் நடந்துக் கொள்ளட்டும். அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும், நம்பிக்கை கொள்பவர் தனது அதிதியிடம் சிறந்த முறையில் பருமாறிக் கொள்ளட்டும்".**

(புகாரி, முஸ்லீம்)

அபுகுறைரா (ரலி) அவர்கள் தெரிவித்திருக்கின்றார். திரு நபி (ஸல்) கூறினார்கள், **"ஒருவரிடம் மிக சிறந்த இஸ்லாம் நிலை கொண்டிருக்கிறது என்பதன் அறிகுறி, அவர் தேவையற்ற காரியங்களில் ஈடுபடாமல் இருப்பது ஆகும்".** (திர்மிதி, இப்னுமாஜ, அஹமது)

திரு நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபுகுறைரா (ரலி) அவர்கள் தெரிவிக்கிறார்,

தனக்கு ஒரு அறிவுரை அளிக்குமாறு ஒருவர் திரு நபி (ஸல்) அவர்களிடம் கேட்டுக்கொண்டார். அந்நேரம் **"நீங்கள் கோபம் கொள்ளாமலிருங்கள்"** என்று திரு நபி (ஸல்) பதிலளித்தார். ஆனால் அம்மனிதன் அக்கேள்வியை மேலும் பலமுறை திரும்ப திரும்ப கேட்டார். அவ்வேளைகளிலெல்லாம் திரு நபி (ஸல்) அளித்த பதிலானது **"நீங்கள் கோபம் கொள்ளாமலிருங்கள்"** என்றாகும்.

அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார். திரு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், **"தமக்கு விரும்புவதையே தம் சகோதரருக்கும் விரும்புகின்றவராக உங்களில் ஒருவர் ஆகாதவரை அவர் உண்மையான மு.்.மினாகமாட்டார்"** (புகாரி, முஸ்லீம்)

நல்லியல்பு என்னும் இத்தகைய தூண்களை ஒரு நம்பிக்கையாளர் தனது அன்றாட வாழ்கையில் உயர்த்தி கொண்டால், அத்தூண்கள் என்னும் அறிவுரைகள் மிக உயரிய நல்லொழுக்க பண்புகளை அவரிடம் அழைத்துவரும். அந்நிலையில் இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவர் வெற்றியடைந்து விடுவார். இக்கதீஸ்களை அடிப்படையாக்கிக் கொண்டும், அதோடு நன்னடத்தை என்னும் மற்ற தூண்களை கண்டறிந்தும் நாம் செயல்படுவோமேயானால், நன்னடத்தை மற்றும் நல்லியல்பு ஆகிய உயரிய நல்லொழுக்க பண்புகளை மேலும் அதிகரிக்க நமக்கு துணை செய்யும். அதற்கான வழிமுறைகளை இஸ்லாத்தில் நமக்கு பார்க்க முடியும்.

அறநெறி மற்றும் நேர்மையினை பெற்றுக் கொள்ளும் படி அல்லாஹ்வும் அவனது தூதரும் நமக்கு ஊக்குவித்து வந்தனர். நன்னடத்தை என்பதே வலுவான இஸ்லாமிய நம்பிக்கை. அத்தகைய நம்பிக்கையை ஒருவர் தம்மிடம் நேர்மையான முறையில் வளர்க்கவும் அதனை பாதுகாக்கவும் வேண்டும். ஆகவே நமது உறுப்பினர்கள், எந்த தீமைகளையும் தங்களது சுற்றுப்புறங்களில் விளைவிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். நாம் நமது மனதைக் கட்டுப்படுத்தி கொள்வதுடன் மற்றவர்களுடைய நலனைப் பற்றி மட்டும் சிந்தித்து செயல்பட வேண்டும். எனவே நாம் கட்டாயமாக கடைபிடிக்க வேண்டிய காரியங்கள் கீழ் வருமாறு.

1.வீணான பேச்சுவார்த்தைகளிலிருந்து நாவை பாதுகாக்க வேண்டும். அதாவது வதந்திகள் பரப்புதல், பிறர் மீது அவதூறுகள் கூறுதல், பயனற்ற மற்றும் அடிப்படையற்ற பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுதல் போன்றவைகள். இத்தகைய தீய பேச்சுவார்த்தைகளில் ஏற்படும் நாவுக்கு எலும்பு இல்லை. அது விரும்புகின்ற வகையில் சுதந்திரமாக என்ன வேண்டுமென்றாலும் கூறிக் கொண்டிருக்கும். அபத்தமான காரியங்களை முணுமுணுத்தவாறிருக்கும், பொய்கள் கூறிக்கொண்டிருக்கும், மோசமான இயல்பு மற்றும் தீயத் தன்மையை அது வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். இவையொன்றும் அல்லாஹ்வை மகிழ்ச்சிபடுத்தும் வகையில் அமைவதில்லை. ஆகவே நீங்கள் பேசுவதற்கு தேவையிருந்தால் மட்டும் பேசுங்கள். இல்லையென்றால் நீங்கள்

மௌனமாகயிருங்கள். அவ்வாறேயானால், அபத்தங்கள் கூறாமலிருப்பதற்கும், பிறரை காயப்படுத்தாமல் இருப்பதற்கும் நமக்கு முடிந்து விடும்.

நாவைப் பற்றி அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார். **“அல்லாஹ்வின் மீதும் இறுதிநாளின் மீதும் நம்பிக்கை கொள்பவர் நல்ல வார்த்தைகளைக் கொண்டு சிறந்த முறையில் பேசுபவராக இருக்க வேண்டும். அல்லது மௌனமாகயிருப்பதே அவருக்கு சிறந்தது”.** (புகாரி, முஸ்லீம்)

தனது நாவைக் கட்டுப்படுத்தாத எவரும் (அதாவது கெட்ட மற்றும் வீணான வார்த்தைகளை பேசுதல்) நன்னடத்தை கொண்ட நல்ல மனிதர்களின் வகுப்பில் உட்பட மாட்டார்கள் என்பது மேல் வசனத்திலிருந்து தெள்ள தெளிவாக புரிந்து கொள்ளலாம். அதனால் தான் ஒவ்வொரு நம்பிக்கையாளரும் பேசுவதற்கு முன்பாக மிக நல்ல முறையில் யோசித்து கொள்ள வேண்டும். நீங்கள் பின்னர் வருத்தப்பட கூடும் காரியங்களை பேசாமலிருப்பதற்கு கவனமாக இருங்கள். இல்லையேல் அல்லாஹ்வின் பார்வையில் அது உங்களின் தீமையாக பதிவு செய்யப்படும். அல்லாஹ் திருமறையில் கூறியிருப்பதை கவனியுங்கள்.

**“நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி சரியானதும் உண்மையானதுமான வார்த்தையைக் கூறுங்கள்” (33 – 71)**

2. தேவையில்லாத காரியங்களில் ஆர்வம் காட்டாமலிருங்கள். ஆர்வம் மிக மோசமான ஒன்றாகும். அக்காரியத்தில் ஜாக்கிரதையாகயிருங்கள். ஒரு நம்பிக்கையாளர் தனக்கு தேவையில்லாத காரியத்தில் ஈடுபடாமலிருக்க வேண்டும். மட்டுமல்ல, ஆர்வம் நிறைந்த மனிதன் தேவையில்லாத காரியங்களில் ஈடுபட்டு பேசி ஒரு மோசமான மனநிலையை வளர்த்துக் கொள்கிறார். அந்நபர் ஒருபோதும் மரியாதைக்குரிய ஒரு நபராகயிருக்க மாட்டார். உண்மையில் அவரது ஆர்வமும், தேவையில்லாத காரியங்களில் அவர் ஈடுபட்டுக் கொள்வதன் மூலமும் அவர் நன்மையிலிருந்து வெகுதூரம் அகன்று செல்கிறார். ஆனால் இங்கு கூறப்பட்ட தீமைகளிலிருந்து அவர் விலகி நின்றால்,

அவர் நல்லொழுக்கமுடைய ஒரு மனிதராக மாறி விடுவார். நன்னடத்தை, அடக்கம் மற்றும் மரியாதைக்குரிய ஒருவராக அவர் பரிணமித்து விடுவார். அத்துடன் அவர் நேர்மையாளராகவும் அல்லாஹ்வின் மீது அன்பு மற்றும் பக்தியுடையவராகவும் அவர் மாறி விடுவார். நிச்சயமாக அத்தகைய ஒரு நபர் நம்பிக்கையாளரின் வகுப்பில் உட்படுவார். ஏனெனில் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள், **"உண்மையில் ஒரு நபரின் இஸ்லாமிய சிறப்பம்சமானது, அவர் தேவையில்லாத காரியங்களிலிருந்து விலகி நிற்பதாகும்"** (திர்மிதி, இப்னுமாஜ, அஹ்மது)

3. ஒரு நம்பிக்கையாளர் கோபமான தூண்டுதல்களுக்கு கீழ்படியாமல் இருக்க வேண்டும். அக்காரியத்தில் அவர் விழிப்புணர்வு பெற்றிருக்க வேண்டும். ஒரு நம்பிக்கையாளர் கோபத்திற்கு ஆளாகிவிட்டால் அவர் முட்டாள்தனமாக பேச ஆரம்பிப்பார். பின்னர் அவர் அதை எண்ணி மிக அதிகமாக வருந்த வேண்டிய நிலை உருவாகும். கோபம் நற்செயல்களை புசித்துக் கொள்ளும் ஒன்றாகும். அந்நிலையில் சாத்தான் அந்த நபரின் செயல்களை கையாளுவதற்கு ஆரம்பித்து விடுவான். அதன் விளைவாக அவரது நன்மைகள் அனைத்தும் தீமைகளாக மாறி விடுகிறது. நன்னடத்தை மற்றும் நல்லியல்பிலிருந்து அவர் அகன்று செல்லும் நிலை உருவாகிறது.

கோபத்திற்கு எதிராக, அதாவது கோபத்திலிருந்து மீட்சியை பெற நமது அன்புக்குரிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல்வேறு வழிமுறைகளை நமக்கு கற்பித்திருக்கின்றார். அதில் ஒன்றை நீங்கள் பாருங்கள்.

ஒரு வார்த்தை எனக்கு தெரியும். அவ்வார்த்தையை நீங்கள் கூறுவீர்களேயானால், உங்கள் கோபம் சிதறடிக்கப்படும் அவ்வார்த்தையாவது **"சாபத்திற்குரிய சாத்தானிடமிருந்து நான் அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுகிறேன்"** என்பதாகும்

(புகாரி, முஸ்லீம்)

ஆனால் மேற்கூறிய சட்டத்திற்கு, ஒரு விதி விலக்கு உள்ளது. குறிப்பாக அல்லாஹ்வின் கட்டளைகளை நடைமுறைப் படுத்தும்

காரியத்தில் மட்டும்! (அதாவது, அல்லாஹ்வின் கட்டளைகளை எப்போது மீறப்படுகிறதோ அந்நேரத்தில் மட்டும் இது பாதகமாகும்). இக்காரியத்தை இமாம் புகாரி (ரலி), இமாம் முஸ்லீம் (ரலி) மற்று கதீஸ் நூல்கள் தொகுப்பாளர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**“நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த ஓர் காரியத்திற்கும் கோபப்பட்டதில்லை. ஆனால் அல்லாஹ் ஏற்படுத்திய தடையை மீறினால் அவருடைய கோபத்தை தடுத்து நிறுத்த எதுவொன்றுக்கும் முடியாது”.**

4. ஒரு நம்பிக்கையாளர் இதயஅமைதியை அடைவதற்கு கடினமான நிலையில் முயற்சிக்க வேண்டும். அவருக்கு எவரிடத்திலும் காழ்ப்புணர்ச்சி, பகைமை அல்லது மோசமான எண்ணங்கள் இருக்கக் கூடாது. அது நம்பிக்கையாளர்களிடத்திலானாலும் சரி, அவநம்பிக்கையாளர்களிடத்திலானாலும் சரி! இதயம் ஈமானின் ஆசனமாகும் அல்லது இறைவனின்றி வேறு எதற்கும் அங்கு இடமில்லை. மனிதனின் அவ்விடத்தையே இறைவன் பார்வையிடுகிறான். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்.

**“இறைவன் உங்கள் உடல்களையோ அல்லது உங்கள் தோற்றத்தையோ பார்வையிடுவதில்லை. மாறாக அவன் உங்கள் இதயங்களைதான் பர்வையிடுகின்றான். தொடர்ந்து திரு நபி (ஸல்) அவர்கள் தனது மார்பை சுட்டிக் காட்டினார்”.** (முஸ்லீம்)

தனது முஸ்லீம் சகோரனுக்கு எதிராக, அல்லது தனது முஸ்லீம் சகோதரனைப் பற்றிய கெட்ட எண்ணங்களை தனது இதயத்தில் வைத்திருக்கும் எவர் ஒருவரும் நல்லொழுக்கத்துடன் வாழும் மக்களின் வகுப்பில் உட்பட மாட்டார். ஏனெனில் அவரது இதயத்தில் குடிக் கொள்ளும் தீய எண்ணங்கள் மற்றும் அவரது மாறுபாடுகள் போன்றவை அவரது வெளிப்படையான தோற்றத்தை பாதிக்கின்றது. அவருடைய இதயத்தில் மறைந்திருப்பவை அவருடைய முகத்தில் வெளிப்பட்டுக் கொள்கிறது. மட்டுமல்லாமல் அவருடைய நடவடிக்கைகளிலும் அது வெளிப்படுகிறது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். **உண்மையில் மனிதனின் உடலுக்குள் ஒரு மாமிசத் துண்டு உள்ளது. அது நல்லதாக இருந்தால், முழு உடலும் நல்லதாக**

**இருக்கும். அது தீயதாகயிருந்தால், முழு உடலும் தீயதாக இருக்கும். உண்மையில் அது இதயமாகும்.** (புகாரி, முஸ்லீம்)

எனவே, நாம் நமது இஸ்லாமிய சகோதர சகோதரிகளிடம் பாசத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது நாம் ஒவ்வொருவருடைய கடமையாகும். நம்பிக்கையாளர்களுக்கு அது தவிர்க்க கூடாத கடமையாகும். இவ்வுலகில் அவர்களுக்காக நீங்கள் நல் வாழ்த்துகளை கூறுவதுடன் மறுவுலகிற்காக நீங்கள் பிரார்த்தனை செய்யவும் வேண்டும். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**"தமக்கு விரும்புவதையே தம் சகோதரருக்கும் விரும்புகின்றவராக உங்களில் ஒருவர் ஆகாதவரை அவர் முழுமையான மு.ஃ.மினாகமாட்டார்"**

(புகாரி, முஸ்லீம்)

ஆகவே, நாம் மிக சிறந்த முறையில் செயல்பட வேண்டும். நான், எனது அன்புக்குரிய அனைத்துத் தோழர்களும் மற்றும் உலகெங்குமுள்ள முஸ்லீம்களும் மிக நல்ல முறையில் நடந்துக் கொள்வதற்கான ஆற்றலை பெற வேண்டும். நல்லியல்பு மற்றும் நன்னடத்தை என்னும் தூண்களை உங்களுக்குள் நிலைநாட்டிக் கொள்ளுங்கள். அவ்வாறேயானால், நீங்கள் உண்மையான முஸ்லீமாக மாறிவிடுவீர்கள். ஆம் சஹீஹில் இஸ்லாம் (உண்மையான இஸ்லாம், உண்மையான நம்பிக்கையாளர்கள்). அல்லாஹ்விடமான நட்பின் அடிப்படையில் மட்டுமே அந்நிலையை அடைவதற்கும், அதை நிலை நாட்டுவதற்கும் முடியும். நீங்கள் அவனிடம் பற்றி சேர்ந்து நில்லுங்கள். அதாவது பிரார்த்தனை மற்றும் நன்னடத்தை மூலமும் அவனிடம் நெருங்கியிருங்கள். உங்கள் குடும்பத்தினரிடமும், உங்கள் அண்டை வீட்டார்களிடமும், உங்கள் நண்பர்களிடமும், உங்கள் சக மனிதர்களிடமும், உங்கள் சமூகத்தினரிடமும் உங்களின் நன்னடத்தை முறைகளை சொற்களில் காட்டாமல் செயலில் காட்டுங்கள். அல்லாஹ்வின் போதனைகளுக்கு கட்டுப்பட்டு, மிக சிறந்த முறையில் உங்கள் வாழ்க்கையை அமையுங்கள். அவ்வாறேயானால், உங்களின் வாழ்க்கையின் அனைத்து

துறைகளிலும் அல்லாஹ்வின் உதவி உங்களுக்கு கிடைத்து விடும். இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

**Translated by:**
*Azim Ahmad (Naib Amir)*
Ph: 7339689239

## ISSUED BY





**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
*Amir Kerala South Zone, India*
**Kerala Contact No: 9447001832**

**SIRAJ DEEN SAHIB**
*Amir Tamil Nadu State, India*
**Tamil Nadu Contact No: 7502272774**

### NATIONAL AND INTERNATIONAL





**MUKARRAM SALEEM SAHIB**
*(Naib Amir Tamil Nadu)*
**Tamil Nadu and National Level**
**Contact No: 8903398355**

**MUKARRAM FAZIL JAMAL SAHIB**
*(Naib Amir Delhi)*
**National and International Level**
**Contact No: 9711237484**
**Blog:** www.sahih-al-islam.blogspot.in

**PUBLISHED BY:**
JAMAAT-UL-SAHIH-AL-ISLAM
KALIYAKKAVILAI BRANCH
(TAMILNADU AND KERALA BORDER)
Ph No: 9789180817, 9171977109